**கருவலகஸ்வெவ பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 30 மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுலை 24 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் கருவலகஸ்வெவ பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீடு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் பொருட்கள் மற்றும் சேவைகளின் விநியோகத்திற்காக மூன்று விநியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 481,642 தொகை கடன்கொடுனராக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்காண்டிற்குரிய செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | மீளாய்வாண்டில் ரூபா 663,729 செலவில் மஹகம பொது நூலகத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த புதிய நிர்மாணம் மற்றும் பொருத்துதல்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மூலதன செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (iii) | மீளாய்வாண்டு இறுதியில் இபலோகம நீர் கருத்திட்டத்தின் 31 நீர் பாவனையாளர்களிடமிருந்து | கணக்காண்டிற்குரிய வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

| | |
|---|---|
| அறவிட வேண்டிய ரூபா 158,000 ஆன நிலுவை அங்கத்துவ கட்டணம் மற்றும் சபையின் குத்தகை வழங்கப்பட்ட கடையறைகளிற்கா 10 குத்தகைக்காரர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 71,490 ஆன மின் கட்டணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். |

**(ஆ) கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபைக்கு பெற வேண்டிய 07 கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 10,098,945 ஆனதுடன் அவற்றில் 03 ஆண்டுகளை விஞ்சிய பெற வேண்டிய மீதிகள் ரூபா 762,054 ஆனது. | சபைக்கு பெற வேண்டிய நிலுவை வருமானத்தை துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் | நிலுவை வீத வரி, நீர் வரி, நானாவித கடன்படுனர் மற்றும் வேலை கடன்படுனர்களில் ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளதுடன் எஞ்சிய நிலுவை தொகை மற்றும் நிலுவை குத்தகை வாடகையை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலுத்த வேண்டிய 06 கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 9,770,505 ஆனதுடன் அவற்றில் 03 ஆண்டுகளை விஞ்சிய செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 1,333,996 ஆனது. | செலுத்த வேண்டிய மீதிகளை துரிதமாக தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் | நானாவித கடன்கொடுனர், வேலை கடன்கொடுனர், நானாவித வைப்புக்களில் ஒரு பகுதி தீர்க்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய மீதி மற்றும் வருமானம் தொடர்பாக வைப்புக்களை தீர்க்க நடவடிக்கை எடுக்கிறேன். |

**(இ) கணக்காய்விற்கான தேவையான எழுத்துமூல சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுப் பெறுமதி ரூபா 5,897,151 | நிதிக் கூற்றுக்களில் | அலுவலக ஒன்றுகூடல் |

| | | |
|---|---|---|
| ஆன 03 கணக்கு விடயங்களிற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் எழுத்து மூல சான்றுகளை சமர்பிக்க வேண்டும். | மண்டபம் மற்றும் நீர் உதிரிப்பாக கையிருப்பு தொடர்பாக எழுத்து மூல சான்றுகளை எதிர்காலத்தில் சமர்பிப்பதுடன், குழாய் கிணறு கட்டணம் பற்றிய தகவல்கள் சபையிடம் இல்லை என அறிவிக்கிறேன். |

## 1.4 இணங்காமை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவம் தீர்மானங்களுடன் இணங்காமை

பின் வரும் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவம் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டம் | | | |
| 129(2) (ஊ) பிரிவு. | பிரதேச சபைக்கு பெற வேண்டிய ரூபா 751,756 ஆன வாடகை முறையாக அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேலும் அறவிடப்பட வேண்டிய வருமானத்தை துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் | நிலுவை கடையறை வாடகையை அறவிட சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| நி.பி. 571 | 02 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 117,000 ஆன 14 வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிதிப் பிரமாணம் பிரகாரம் 02 ஆண்டுகளை விஞ்சிய வைப்பு மீதிகளை எதிர் காலத்தில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 1,112,273 ஆனதுடன், அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 2,024,927 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| i | வீத வரி மற்றும் குத்தகை | 9,055 | 5,156 | 4,396 | 2,153 | 5,715 | 4,400 | 4,895 | 1,523 |
| ii | வாடகை | 2,687 | 1,828 | 1,600 | 752 | 2,601 | 2,346 | 2,019 | 577 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 177 | -- | 141 | -- | 242 | -- | 84 | -- |
| iv | ஏனைய வருமானம | 39,274 | -- | 34,067 | -- | 36,238 | -- | 27,260 | -- |
| | கூட்டுத் தொகை | 51,193 | 6,984 | 40,204 | 2,905 | 44,796 | 6,746 | 34,258 | 2,100 |

சேர்க்கப்பட்ட வருமானத்தினுள் ஆண்டின் பில்லிடப்பட்ட வருமானத்திலிருந்து சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானத்திலிருந்து சேர்க்கப்பட்ட வருமானமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

#### 2.2.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மொத்த பில்லிடப்பட்ட வருமானம் ரூபா 6,983,491 மற்றும் மீளாய்வாண்டு ஆரம்பத்தில் நிலவிய நிலுவை வருமானம் ரூபா 2,099,948 ஆனதுடன், மீளாய்வாண்டினுள் பில்லிடப்பட்ட வருமானத்திலிருந்து ரூபா 5,538,228 மற்றும் நிலுவை | வருடாந்தம் பில்லிடும் வருமானத்தை ஆண்டினுள் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

வருமானத்திலிருந்து ரூபா 1,109,264 சேர்க்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆண்டினுள் மொத்த வருமான சேகரித்தலின் முன்னேற்றம் 73 சதவீதம் மாத்திரமே ஆனது.

**2.2.3 நீர் வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கருவலகஸ்வெவ மற்றும் இபலோகம நீர் கருத்திட்டங்களில் நீர் விநியோகம் துண்டிக்கப்பட்ட 63 நீர் நுகர்வோர்களின் நிலுவை நீர் கட்டணம் ரூபா 132,649 மற்றும் இபலோகம நீர் கருத்திட்டத்தின் 31 நீர் நுகர்வோர்களின் நிலுவை அங்கத்துவ கட்டணம் ரூபா 158,000 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கட்டணத்தை துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**2.2.4 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக பில்லிடப்பட்ட கடையறை வாடகை ரூபா 1,185,177 இலிருந்து ஆண்டினுள் ரூபா 927,032 அறவிடப்பட்டிருந்ததுடன் அது பில்லிடப்பட்ட தொகையின் 78 சதவீதமானது. மீளாய்வாண்டு ஆரம்பத்தில் நிலுவை கடையறை வாடகை ரூபா 520,757 இலிருந்து ஆண்டினுள் ரூபா 124,362 அறவிடப்பட்டிருந்ததுடன் அது வருட ஆரம்ப நிலுவை தொகையின் 24 சதவீதமானது. | ஆண்டினுள் பில்லிடப்பட்ட கடையறை வாடகையை ஆண்டினுள்ளேயே அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. |

**2.2.5 நீதி மன்ற தண்டப்பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்து 2019 | மீளாய்வாண்டிற்கான அனைத்து | 2019 ஆண்டிற்காக பெற வேண்டிய அனைத்து நீதி மன்ற |

| | | |
|---|---|---|
| திசெம்பர் 31 திகதிற்கு பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 2,725,644 ஆனது. | தண்டப்பணத்தினையும் இனங்கண்டு அறவிட வேண்டும். | தண்டப்பணம் ரூபா 2,725,644 ஆன 2020 ஆண்டில் கிடைத்துள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை மேற்கொள்ள உப விதிகள் விதிக்க வேண்டிய போதும் 2019 திசெம்பர் 31 திகதி வரை 03 விடயங்களிற்காக மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தது. | உரிய உப விதிகளை விதித்து பொது மக்கள் நலன்களிற்காக சேவைகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொது உல்லாசத்திற்கான இடங்களை வழங்கல், கட்டுப்படுத்தல் மற்றும் அதன் முகாமைக்கான புதிய உப விதிகளை உருவாக்கி அதன் திருத்தங்களிற்காக உள்ளூராட்சி ஆணையாளரிற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் ஏனைய விடயங்களிற்காக எதிர்காலத்தில் விதிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

**(ஆ) நிறைவேற்றப்படாத செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த பாதீட்டினூடாக ரூபா 63,418,000 ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்த 26 செயற்பாடுகள் ஆண்டினுள் நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டில் ரூபா 62,350,000 ஆன மூலதன மதிப்பீட்டு தொகையில் ஆண்டினுள் ரூபா 299,059 ஆன ஆகக் குறைந்த அளவே செலவிடப்பட்டிருந்தது. அது மதப்பீட்டுத் பெறுமதியின் 0.48 சதவீத அளவை கொண்டிருந்தது. | வருடாந்த பாதீட்டினூடாக உத்தேசிக்கப்பட்ட விடயங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபையின் குறைந்த வருமான நிலமை மற்றும் மாகாண திட்டவட்ட உதவிகள் உள்ளிட்ட ஏனைய அமைச்சு உதவிகள் எதிர்பார்த்த பிரகாரம் கிடைக்காமை காரணமாக பாதீட்டினூடாக உத்தேச அனைத்து கருத்திட்டங்களையும் மேற்கொள்ள முடியவில்லை. |

**(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 ஆண்டு ரூபா 1,338,227 மற்றும் 2018 ஆண்டு ரூபா 719,200 செலவில் கழிவுப் பொருள் முகாமை கருத்திட்டமொன்றை ஆரம்பித்திருந்த போதும் நகரில் குப்பைகளை ஒன்று திரட்டி வெளியேற்றுவதை தவிர கழிவுப் பொருள் மீள்சுழற்சி செயற்பாடொன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | முறையாக கழிவுப் பொருள் மீள்சுழற்சி மற்றும் வெளியேற்றல் மேற்கொள்ளப்பட வேண்டும். | திண்மக் கழிவு முகாமைத்துவ கருத்திட்டத்தின் கீழ் கழிவுப் பொருட்கள் திரட்டப்படுவதுடன் அவை உக்கலடையும் மற்றும் உக்காத கழிவுகளாக வேறாகி உக்கலடையாத கழிவுகள் விற்கப்படுகின்றன. உக்கும் கழிவுகள் பெறுமளவில் இல்லாததால் அகழி முறையில் கொம்போஸ்ட் உற்பத்தி முறைமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆண்டில் நடைமுறைபடுத்த திட்டமிடப்பட்டிருந்த 20 செயற்பாடுகள் ஆண்டினுள் ஆரம்பிக்கப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | மிகக் குறைந்த வருமானமுடைய சபை ஒன்றாகையால் குறித்த செயற்பாடுகளை மேற்கொள்ள முடியவில்லை. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(அ)** | பின்னடைந்த மற்றும் தனிப்பட்ட கிராம கருத்திட்டம் 2017 இன் கீழ் தனியார் காணியொன்றில் மேற்கொள்ளப்பட்டிருந்த ஒல்லுக்குலிய கிணறு நிர்மாணம், கிணற்றை சுற்றி வேலி நிர்மாணித்தல் மற்றும் பிரவேச பாதை தயாரிப்பதற்காக ரூபா 1,089,055 | குறித்த காணியை சபைக்கு சுவீகரித்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள | நிர்மாணிக்கப்பட்ட கிணறு அமைந்துள்ள காணி உரிமையாளர் சுவீகரித்தலிற்கான விருப்பை எழுத்து மூலம் அறிவித்துள்ளார். இக் காணியை அளப்பதற்கு தேவையான அளவை |

| | | | |
|---|---|---|---|
| | செலவிடப்பட்டிருந்ததுடன் இந் நிர்மாணத்துடன் கூடிய காணியை சபைக்கு சுவீகரித்துக் கொண்டிருக்கவில்லை. | வேண்டும். | கட்டளையை தருமாறு 2017.11.02 பிரதேச செயலகத்திடம் கோரப்பட்டுள்ளது. மிக விரைவில் இச் செயற்பாட்டை மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| **(ஆ)** | மீளாய்வாண்டு இறுதியளவில் சபையினால் வாடகைக்கு வழங்கப்பட்ட 16 கடையறைகள் மூடப்பட்டிருந்ததுடன் அம் மூடப்பட்ட கடையறைகளிலிருந்து மற்றும் மேலும் காணப்படும் 16 கடையறைகளிலிருந்து அறவிட வேண்டிய நிலுவை வாடகை மற்றும் நிலுவை மின்கட்டணம் ரூபா 565,471 ஆனதுடன் நிலுவை காலம் 02 மாதங்கள் முதல் 10 மாதங்கள் வரையானது. | நிலுவை வாடகை மற்றும் நிலுவை மின்கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை கடையறை வாடகை குத்தகைகாரர்களுக்கு சட்டத்தரணியூடாக கோரிக்கை கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எதிர்வரும் நாட்களில் நீதிமன்ற செயற்பாடுகளை மேற்கொளள் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |
| **(இ)** | சபையினால் மின் விளக்குகள் இடப்பட்ட மின் கம்பங்களிற்கு இலக்கம் இடப்பட்டிருக்காததுடன், சபையினால் பராமரிக்கும் மின் குமிழ்களின் எண்ணிக்கையை குறிப்பாக இனங்கண்டு பதிவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், வீதி விளக்குகள் பராமரிப்பு தொடர்பாக முறையாக பதிவேடுகள் பேணப்படாததுடன், வீதி வெளிச்சம், விளக்கு பொருத்தல் மற்றும் பராமரிப்பு தொடர்பாக சபையின் வலுவான உள்ளக கட்டுப்பாடொன்று இல்லாமை அவதானிக்கப்பட்டது. | மின் விளக்கு கம்பங்கள் இலக்கம் இடப்பட வேண்டியதுடன் வீதி விளக்கு பராமரிப்பு தொடர்பான பதிவேடு முறையாகப் பேணப்பட வேண்டும். | வீதி விளக்குகளை இலக்கமிட அனைத்து வேலைகளும் செய்யப்பட்டிருந்த போதும் நாட்டினுள் காணப்படும் கொரோனா இடர் நிலைமை காரணமாக வீதி விளக்குகள் இலக்கமிடும் வேலைகள் மேற்கொள்ள முடியாது போனதுடன் துரிதமாக அந்த இலக்கமிடும் வேலைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இரண்டாம் நிலை தரத்திற்குரிய 03 நூலக அதிபதி பதவிகள், ஒரு தொழிநுட்ப அலுவலர் பதவி, ஒரு முன்பள்ளி ஆசிரியர் பதவி, ஒரு வேலை | தேவைக்கு ஏற்றவாறு முறையாக ஆளணி வெற்றிடங்களை நிரப்பும் வேலைகளை மேற்கொள்ள வேண்டும். | இரண்டாம் நிலை பதவிகளிற்கான நியமனம் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் மாத்திரம் மேற்கொள்ளப்படுவதுடன் இது தொடர்பாக காலாண்டு |

| | | |
|---|---|---|
| பரிசோதகர் பதவி மற்றும் ஒரு முகாமை உதவியாளர் பதவி என்பன வெற்றிடமாக காணப்பட்டன. | | அடிப்படையில் ஆளணி அறிக்கை தகவல்கள் அனுப்பப்படுகிறது. |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 விளைவற்ற/ குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 மற்றும் 2018 ஆண்டுகளில் ரூபா 21,262,185 செலவில் நிர்மாணிக்கப்பட்ட நீலபெம்ம விடுமுறை விடுதி, 02 வாராந்த சந்தைகள் மற்றும் நீர் சுத்திகரிப்பு அலகு என்பன விளைவற்று நிலவின. | வளங்களிலிருந்து உச்ச பயனை பெற்றுக் கொள்ள திட்டத்தை தீட்டி நடைமுறைப்படுத்த வேண்டும். | நீலபெம்ம விடுமுறை விடுதி அமைந்துள்ள காணியை சுவீகரிக்கும் வேலைகள் மேற்கொள்ளப்படுகிறது. தப்போவ மற்றும் வீரபுர வாராந்த சந்தைகள் மற்றும் நீர் சுத்திகரிப்பு அலகு 2020 ஜனவரி மாதம் டென்டர் இடப்பட்டது. எனினும் எவ்வித விண்ணப்பதாரரும் முன்வரவில்லை. நீர் சுத்திகரிப்பு அலகிற்கு மீண்டும் மே மாதம் விலை மணு கோரப்பட்டுள்ளது. விலை மணு திறப்பு ஜூன் மாதம் மேற்கொள்ளப்படும். |

**3.5 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தாமான கட்டிடம் அமைந்துள்ள காணி மற்றும் சபை பயன்படுத்தும், கட்டுப்படுத்தும் மற்றும் பராமரிக்கும் மைதானம், சனசமூக நிலையம் அமைந்துள்ள காணி மற்றும் 70 சுடுகாடுகளின் சட்டபூர்வமான உரிமையை சபைக்கு சுவீகரித்துக் கொண்டிருக்கவில்லை. | சபை பயன்படுத்தும் எனினும் சுவீகரித்துக் கொள்ளாத சொத்துக்களை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்திர் சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.6 பெறுகைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) றம்பாவெவ நீர் கருத்திட்டத்தின் கால்வாய் வெட்ட பெகோ இயந்திரமொன்றை வாடகைக்கு பெற்றுக் கொள்ளல் | | |
| 2006 அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.3.3(ஊ) பிரிவிற்கு மாற்றமாக மேல் விடயம் தொடர்பாக வழங்குனர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த முத்திரையிடப்படாத திறந்த விலை மணு ஏற்கப்பட்டு பெறுகைகள் குழுவினால் மதிப்பிடப்பட்டிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளிற்கு அமைய பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இச் செயற்பாட்டிற்காக பிரதேச சிறியளவிளான வழங்குனர்களால் விலை மணு சமர்பிக்கப்பட்டு இருந்ததுடன், இவ் வழங்குனர்களினால் பெறுகைகள் துண்டுப் பிரசுர ஆலோசனையை பின்பற்றாது முத்திரையிடாத விலை மணுக்கள் முன் வைக்கப்பட்டிருந்தன. கூடுதலான போட்டியை எதிர்பார்த்ததால் கிடைத்த அனைத்து விலை மணுக்களையும் ஏற்றுக் கொண்டதுடன், எதிர்காலத்தில் உரிய சட்ட திட்டங்களிற்கு அமைய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) றம்பாவெவ நீர் கருத்திட்டத்திற்கு நீர் குழாய் உதிரிப் பாகங்கள் கொள்வனவு செய்தல் | | |
| 2006 அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.2.2 பந்திக்கு முரணாக மேல் விடயம் தொடர்பாக விலை மணு முன்வைக்க 05 நாட்களான காலமொன்று இடமளிக்கப்பட்டிருந்தது. மேலும் ரூபா 8,715,530 ஆன மேல் பண்டங்களை வழங்கல் தொடர்பாக அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1(ஆ) பிரிவில் குறிப்பிடப்படுவதன் பிரகாரம் முறையான உடன்படிக்கை ஒன்றை வரைந்து | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளிற்கு அமைய பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | குறித்த விடயத்திற்காக விலை மணு கோருகையில் 07 நாட்களுடனான காலமொன்று வழங்கப்பட்டதுடன், பெறுமதி சேர்க்கப்பட்ட வரியில் ஏற்பட்ட குறைவின் காரணமாக மீண்டும் விலை மணு கோரப்பட்டது. அதன் போது விலை மணு கோரும் காலம் 05 நாட்கள் மாத்திரம் வழங்கப்பட்டு முதலில் விலை மணு |

| | | |
|---|---|---|
| கைச்சாத்திட்டிருக்கவில்லை. | | முன்வைத்த மூவரிடம் விலை மனு கோரப்பட்டது. பெறுமதி சேர்க்கப்பட்ட வரி திருத்தம் பிரகாரம் நடவடிக்கை எடுத்ததனால் சபைக்கு ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்ட இலாபம் கிடைத்ததுடன், போட்டித் தன்மையில் குறைவு ஏற்படவில்லை. எதிர்காலத்தில் பண்டங்களின் கொள்வனவின் போது உடன்படிக்கை கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கிறேன். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும் சபைக்கு சொந்தமான நூலகம், முன்பள்ளி, பொது மக்கள் சேவை வழங்கல் மற்றும் வீதி விளக்கு பராமரிப்பு போன்ற துறைகளை ஆய்வு செய்ய திட்டம் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தியிருக்கவில்லை. | முக்கிய துறைகள் உள்ளடங்கும் வகையில் கணக்காய்வை திட்டமிட்டு கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். | இவவாண்டிற்காக கணக்காய்வு திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதில் சபைக்கு சொந்தமான நூலகம், முன்பள்ளி, பொது மக்கள் சேவை வழங்கல் மற்றும் வீதி விளக்கு பராமரிப்பு போன்ற துறைகள் உள்ளடக்கப்பட்டுடிருக்காததுடன் எதிர்காலத்தில் திட்டத்தை தயாரித்து செயற்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்கிறேன். |